

பாவாணர் தாத்தா தெரியுமா?

பன்மொழி கற்றவர்;
பைந்தமிழ்க் குழைப்பவர்;
பாவாணர் தாத்தா தெரியுமா?—தம்பி
பாவாணர் தாத்தா தெரியுமா?—அவர்
தென்மொழி ஆய்விலும்
தனித்தமிழ் வாழ்விலும்
திகழ்கின்ற ஞாயிறு புரியுமா?

அறிவினில் சிறந்தவர்!
அன்பினில் மிகுந்தவர்!
அருந்தமிழ் இலக்கணக் கடலவர்—ஒளி
அழகுசேர் கருநிற உடலவர்!—அற
நெறிபிற ழாதவர்!
நிலைகுலை யாதவர்!
நெடுவாடைக் காற்றுக்குப் படலவர்!

பலநூல்கள் யாத்தவர்!
பண்பாடு காத்தவர்!
பதவியைத் தூசென மதிப்பவர்—பொய்ப்
பாராட்டைக் காலினில் மிதிப்பவர்!—இந்த
உலகினில் முதன்மொழி
ஒண்டமிழ் மொழியென
உரைத்தவர்; தீங்கெனில் கொதிப்பவர்!

துன்புற்ற போதிலும்
துவளாத உளத்தவர்!
தொடங்கியகொள்கையை முடித்தவர்-திறந்
தோய்கின்ற நூல்பல வடித்தவர்!—நாம்
இன்புற்று வாழ்ந்திட
இராப்பகல் உழைப்பவர்!
என்றுமே நமக்கெலாம் பிடித்தவர்!

குரல்: 4.

இசை: 4

விலை

25 காசு

தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ் சிறுவர் கலை இதழ்

அப்பா

கையிலே ஓர் குடை!
காலில் செருப்பு நடை!
மெய்யில் வெள்ளை உடை!
மெதுவாய்ப் போவார் கடை!

'அப்பா' அதற்கு விடை;
அம்மா சொல்வாள் தடை!
தப்பாமல் ஓர் வடை
தருவாள் முதுகில்; துடை;

பாடஞ் சொல்லச் செய்வார்!
படிக்கா விட்டால் வைவார்!
ஆடல் பாடல் சொல்வார்!
அன்பைக் காட்டி வெல்வார்!

வேண்டும் பொருளைச் சேர்ப்பார்!
வீட்டை என்றும் காப்பார்!
நீண்ட மீசைக் காரர்!
நம்மேல் ஆசைக் காரர்!

ஆசை

பாப்பா வுக்குப் பால் குடிக்கக்
கொள்ளை ஆசை—எங்கள்
பாட்டிக் கென்றும் கதை சொல்லக்
கொள்ளை ஆசை!

அம்மா வுக்குப் புடவை மேலே
கொள்ளை ஆசை!—எங்கள்
அப்பா வுக்கு மீசை மேலே
கொள்ளை ஆசை!

தாத்தா வுக்குப் பேரன் மேலே
கொள்ளை ஆசை!—இந்தத்
தங்கைக் கென்றும் பாட்டுப் பாடக்
கொள்ளை ஆசை!

பாடல்கள்: துரை-மாணிக்கம்.

தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ்
சிறுவர் கலைஇதழ்

இன்றைய பயனே நேற்றைய உழைப்பு!
இன்றைய சிறுவர் நாளைய உலகம்!
நன்று செய்வதே நமக்குநல் வாழ்க்கை!
என்றும் அழியாது இருப்பது புகழே!

குரல்-4 | தி.பி. ௨000-நளி--நவம்பர்,-டிசம்பர்-69 | இசை-4.

உனை அழிக்கும் எல்லை!

படித்து, அறிவு பெற்றாலென்ன?
பளபளப்பாய் வாழ்ந்தாலென்ன?
பிடித்ததடா 'நாகரிகப்' பேய்தான்—உள்ளம்
பிறழ்ந்ததடா இனிமேல்குட்டிச் சுவர்தான்!

உடுத்தும்எழில் கண்டாலென்ன?
உண்டுறக்கம் கொண்டாலென்ன?
அடுத்ததடா சீரழிவு பார்க்கே—வழி
ஆனதடா அனைத்துலகப் போர்க்கே!

அறிவியலால் என்னபயன்?
அரசியலால் ஏதுநலன்?
செறிவிழந்து போனதடா வாழ்வில்—உளம்
சீர்குலைந்து வீழ்ந்ததடா தாழ்வில்!

வெளியீட்டாளர், பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்
தென்மொழி மின் அச்சகம், கடலூர் 1.

கலைவளர்ச்சி என்னாகும்?
காட்சிநலன் என்னதரும்?
புலவளர்ச்சி மிகுந்ததடா தம்பி!—நெஞ்சு
புண்ணாகிப் போனதடா வெம்பி!

மயிர்ப்புனைவால் யார்க்குப்பயன்?
மழமழப்பால் யார்க்குநலன்?
உயிர்ப்புனைவும் சாம்பிற்றடா தம்பி!-நாடு
உடற்புனைவை ஓம்பிற்றடா நம்பி!

நூலுணர்வால் கண்டதென்ன?
நோட்டமிட்டுப் பெற்றதென்ன?
பாலுணர்வில் தோய்ந்ததடா நெஞ்சம்-இனிப்
பாரினிலே மாந்தர்க்கெது மிஞ்சும்!

எட்டுத்திக்கும் ஆண்டாலென்ன?
எழுநிலமும் வென்றாலென்ன?
தட்டுக்கெட்டுப் போயிற்றடா வாழ்க்கை!—நல்ல
தரமிழந்து விழ்ந்தனை,நீ பூழ்க்கை!

கொம்பின்நுனி நீண்டாலென்ன?
கொத்துமலர் பூத்தாலென்ன?
வெம்பினைநீ பச்சைப்படு பிஞ்சில்-இனி
விளைந்திடுமோ அமைதியுன்றன் நெஞ்சில்!

பகுத்தறிவும் வாய்ந்தாலென்ன?
பல்பொருளும் ஆய்ந்தாலென்ன?
வகுத்தறியும் அறிவிழந்து நின்றாய்—இருள்
வாழ்க்கையிலே உனைமறந்து சென்றாய்!

மிகவுயர்ந்த கட்டிடங்கள்!
மின்விளக்குத் தோரணங்கள்!
அகவுயர்ச்சி எனில், அடடா இல்லை!—அவை
அத்தனையும் உனையழிக்கும் எல்லை!



காந்தப் பசியாலே
கண்ணயர்ந்த மூவுயிரும்
மீந்த பொருளை
மிகவிரும்பி உண்ணுகையில்
காளையிடம் சின்னக்
கழுதைமகள், "ஐயா, இவ்
வேளையிலே வந்தவரார்
கொஞ்சம் விளக்கிடுங்கள்"
-என்று வினவிடவும்,
ஏறு விளக்கியதாம்!
"நன்று வினவினை, நீ!
நள்ளிரவில் கள்ளரல்லால்
நட்ட நடுக்காட்டில்
நல்லோர் வருவாரோ?
திட்டமுடன் கேள் நீ!
திருடரென அன்னவரை
நாட்டோர் உரைப்பார்கள்!
நம்போல் விலங்கிடை,யிக்
காட்டுமனம் சூழ்வதில்லை.
கள்ளமிட்டும் வாழ்வதில்லை.
மக்களிடை இன்றிருக்கும்
மாண்பில்லாக் கீழ்மைகளுள்
ஒக்கவிது வொன்றாகும்!
உண்மைநிலை இன்னுங்கேள்:

உண்ணும் உணவை
உழுது விளைவிப்பார்
உண்ணு துயிர்வருந்தும்
ஒட்டை உலகமிது!
கட்டும் உடைநெய்யக்
காலமெல்லாம் தேய்ந்திடுவார்
கட்டத் துணிக்கலையும்
கல்மனத்து மாந்தரிவர்!

மக்கள் குடியிருக்க
மண்ணாலும் கல்லாலும்
தக்கபடி வீடுகளும்
தாழா வளமனையும்
கட்டிக் கொடுத்திடுவோர்
காலமெல்லாம் வாழ்வதுவோ
ஒட்டுக் குடிசை!
ஒழுகுகின்ற மேற்கூரை!

கோட்டைபோல் கொத்தளம்போல்
குன்றைப்போல் வானுயர
வீட்டை அமைத்து,
விளக்குகளும் தாம்பொருத்தி,
முக்காலும் பூட்டிவைத்து
முன்னுள்ள கால்பகுதிக்
கெக்காலும் காவல்
இருப்பதுபோல் ஓரிருவர்
வாழ்ந்துவரும் காட்சியினை
வாயால் உரைப்பதுவோ?
சூழ்ந்துவரும் ஏய்ப்புகளும்
சொல்லால் புரிவதுவோ?

தோல்தொழில்கள் செய்வார்; ஊர்
துப்புரவு செய்திடுவார்;
கால்செருப்புத் தைப்பார்;
கழிசெருப்பும் தாமணியார்!

கள்ளப் பணங்கள்;
களவுமிகு வாணிகங்கள்!
எள்ளி நகையாடற்
கேய்ந்த இழிசெயல்கள்!

ஈங்கிவற்றின் சூழ்வில்
இருளில் புதையுண்டு
தாங்கவொண்ணு வெம்பசியைத்
தாங்கிவரும் ஓர்கூட்டம்
என்னதான் செய்யுமிங்கே?
எப்படித்தான் வாழ்ந்துவரும்?
தின்னத் திருடுமன்றோ?
தீங்குசெய்ய முந்துமன்றோ?

எல்லார்க்கும் எல்லா
நலமும் இயைவதென்றால்,
இல்லார்க்கும் கேடில்லை;
ஏய்ப்பார்க்கும் வாய்ப்பில்லை!
அந்நாள் வரையிலும்
ஆக்கம்போல் வீழ்விருக்கும்!
அந்நாள் வரத்தான்
அறிஞர் முயல்கின்றார்"

(தொடரும்)

---

0 முட்டாளுக்கு "அமைதியாக இரு" என்பதைவிட உயர்ந்த அறிவுரை வேறு எதுவும் இல்லை. –பெர்னாட்சா

0 பெருமை என்பது தன் நிலையில் தாழ்வு வராமல் பாதுகாத்துக் கொள்ளுதல். –அக்பர்.

0 வாழ்க்கை ஊற்று சிரிப்பிலும் கண்ணீரிலும் தெறித்து நுரையைக் கக்குகிறது. –தாகூர்

தொகுப்பு: சு. முருகபூபதி.

முத்துமொழிகள்

இராம. செந்தாமரை.

௧. கோயிலுக்கு வெளியே வந்து விழுந்தால் தெய்வமும் கல்லாகி விடும். —காண்டேகர்.

௨. ஓர் அன்னை பத்துக் குழந்தைகளைக் காப்பாற்ற முன் வருகிறாள். ஆனால், பத்துக் குழந்தைகளும் ஓர் அன்னையைக் காப்பாற்ற முன் வருவதில்லையே! —யூதப்பழமொழி.

௩. மழை பொழிவது பொதுநலம்; குடை பிடிப்பது தன்னலம். —பெரியார் ஈ. வே. ரா.

௪. பெண்களையும் பொத்தகங்களையும் கண்டு அச்சப்படு; அவை தெம்மையும் பெருமிதத்தையும் நம் உடம்பில் விளைவிக்கின்றன. —அண்டால் பிரான்சு.

௫. ஒரு நேரத்தில் உனக்கு மகிழ்ச்சி ஊட்டியது என்பதற்காகப் பழமையைப் பிடித்துத் தொங்கிக்கொண்டிருக்காதே! அடுத்த செயலுக்கு, அடுத்த இடத்திற்கு, அடுத்த துய்ப்பிற்கு (அனுபவத்துக்கு)ப் போய்க்கொண்டிரு! —ஒயிட் கௌட்டு.

௬. அறிவு, தனது பாதையைத் தானே செப்பனிட்டு உறுதிப்படுத்திக் கொள்கிறது; தனது ஒளிவிளக்கைத் தானே கையிலேந்திச் செல்கிறது. —வில்மாட்டு.

௭. திசை காட்டும் கருவி தீயோனிடம் சிக்கினால், கலம் பாறையில் மோதுதல் போல, அரசுகளை ஆட்டிவைக்கும் அளவுக்கு ஆற்றல் அமைந்த மேடைப்பேச்சு எனும் நாநலம் (சக்திசாதனம்) ஒரு சிலருக்கு மட்டுமே கிடைத்து, அவர்களும் அந்த ஆற்றலைத் தவறான செயல்களுக்குப் பயன் படுத்துவதானால், மக்களின் நலம், பாறை மோதிய கலமாகும். —அறிஞர் அண்ணா.

திருக்குறளில் மாந்தர் உறுப்புகள்.

[கீழ்க்காணும் எண்கள் திருக்குறள் பாட்டு எண்கள்.]

தலை-444, 891, 964.

மயிர்-(தலைமயிர்) 964, 969.

நெற்றி-(நுதல்) 1011, 1088, 1123, 1138, 1240, 1328

புருவம்-1086.

இமை-775, 1126, 1129.

கண்-52, 71, 184, 349, 392, 393, 445, 500, 566, 573, 585, 686, 705, 709, 780 1041, 1055.

செவி-65; 389, 411, 412, 413, 418, 420, 694 1199.

(முன்பக்கத் தொடர்ச்சி)

அ. இந்த உலகில் நிலையானவை என்று கூறத் தகுதியுடையவை இரண்டே இரண்டுதாம்: ஒன்று சாவு! மற்றொன்று வரி!

க. உலகைக் கண்டிப்பதைவிட, அஃதை அணுகிப் பாடம் பயின்று கொள்வதுதான் அறிவுடையவன் செயல். -செய்டர் பீல்டு.

க0. "வாருங்கள்! ஏதாவது ஒரு கொள்கையைக் கடைப் பிடியுங்கள்! இந்த உலகம் எதையாவது பேசிக்கொண்டிருக்கட்டும்"

-தாண்டே.

கக. சரியாகக் கற்றுணராதவன் வாழ்க்கை எருதுக்கு ஒப்பாகும். அவனுடைய வளர்ச்சி உடலில் தான் தென்படுமேயொழிய, அறிவில் தென்படாது. —புத்தர்.

வாய்- 6, 419, 536, 420, 33, 91, 139, 159, 415, 420 423, 424, 689, 721, 948, 959, 1001, 1100.

பல்-(எயிறு) 1121.

நாக்கு-(நா) 127, 129, 335, 641, 1066.

கன்னம்-(கொடிறு) 1077.

நெஞ்சு- 276, 281, 288, 293, 842, 917, 1053, 1081, 1112 1200, 1237, 1241, 1242 1243, 1244, 1245, 1246, 1247, 1248, 1249, 1264, 1284, 1291, 1292, 1293, 1294, 1295, 1296, 1297, 1298.

தோள்- 149, 906, 916 917, 1103, 1105, 1106, 1218, 1233, 1234, 1235, 1236, 1237, 1262, 1265, 1272, 1279, 1325.

கை- 64, 178, 260, 307, 371, 593.

வயிறு- 413.

கால்- 500, 640

தாள்- 2, 7, 8.

உடம்பு- 80, 330, 338, 340, 345, 627, 943 1029, 1122, 1132, 1163.

மெய்-(உடல்) 65, 619, 925.

எலும்பு- 72, 77, 80.

தோல்- 80, 273.

பெரியோர் கதை!

உலூதர் பர்பாங்கு

கோ. சண்முகானந்தம்.

ஒரு நாள் வேடிக்கைக்காரன் ஒருவன் பள்ளியில் சில வேடிக்கைகளைச் செய்து காட்டிக்கொண்டிருந்தான். அகன்ற தாளினாற் செய்த குழாயின் ஒரு முனையில் கறுப்புத் துணியை நுழைத்து மறுமுனை வழியே வெள்ளைத் துணியாக எடுத்தான். வேடிக்கை பார்த்த பள்ளிச் சிறுவர்களில் ஒருவன் "கறுப்பு நிறப் பேரியை வெள்ளை நிறப் பேரியாகக் காய்க்கச் செய்யக்கூடாதா?" எனக் கற்பனை செய்தான். வேடிக்கை காட்டியவன் பூட்டிய பெட்டியிலிருந்து ஒரு வெள்ளிச் சிமிழை மறையச் செய்தான். அதைக்கண்ட அச்சிறுவனின் கற்பனை, 'மேல்தோலை உரிக்காமல் பழத்திற்குள் இருக்கும் விதைகளை மறையச் செய்தால் அது வியப்பாக இருக்குமன்றோ" என மேலும் விரிந்தது. பெரியவனானதும் தனது கற்பனையைச் செயலாக்கி உலகை வியப்பிலாழ்த்தினான் அந்தச் சிறுவன்.

அந்தச் சிறுவனின் பெயர்தான் உலூதர் பர்பாங்கு. உலூதர் 1849-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 7-ஆம் நாள் பிறந்தான்; மஃசாசுசெட்சு நாட்டைச் சேர்ந்த இலங்காசுடருக்கு அருகிலிருந்த ஒரு பண்ணையில் வளர்ந்தான்; தந்தையின் பெயர் சாமுவேல் வால்டன் பர்பாங்கு; தாயின் பெயர் ஆலிவ் ரோசு பர்பாங்கு.

தக்க பருவத்தில் உலூதர் பள்ளியில் சேர்க்கப்பட்டான். படிப்பில் ஆர்வமிருந்தும், கூச்சத்தால் பள்ளி செல்வதைத் தொல்லையாகக் கருதினான்; வீட்டுக்கு வெளியில் இருப்பதை மிகவும் விரும்பினான். உலூதருக்கு இயற்கைப் பொருள்களின் மீதிருந்த பேராவலை அறிந்த அவனுடைய பெற்றோர்கள் அவனைக் கண்டிக்கவில்லை.

பத்து அகவை நிறையுமுன்னரே உலூதர், 'அழகும் வியப்பும் நிறைந்தது உலகம்! அதில், தான் கண்டறிய வேண்டியவை நிறைய

இருக்கின்றன,' என்று எண்ணினுன். சிறுவனுக இருந்தபோது பிறரிடம் பேசுவதற்குக் கூச்சம் கொண்டான். தங்கள் இல்லத்திற்கு விருந்தினராக வரும் அறிவியல் அறிஞர்களிடம் தன் ஐயங்களை நேரில் கேட்கக் கூச்சப்பட்டான். எனவே, அவர்கள் இருந்த அறைக்கு வெளியே திறந்த சாளரத்தின் அருகமர்ந்து தன் தந்தையின் வினுக்களுக்கு அவர்கள் பகரும் விடைகளைக் கவனமாகக் கேட்டறிவான்.

உலூதர் பெரியவன் ஆனதும் பிறரைக் கேட்கும் துணிவு கொண்டான். தன்னுடைய சிறிய தந்தையான பேராசிரியர் இலெவி சம்னர் பர்பாங்கிடம் மலர்கள், மரங்கள், விலங்குகள், பூச்சிகள் பற்றிக் கேட்டறிந்தான். மஃச்சாசுசெட்சு பகுதியிலுள்ள கேம்பிரிட்சைச் சேர்ந்த கார்வர்டு பல்கலைக் கழகத்தின் அறிவியல் அறிஞர் உலூயி அகாசிசு என்பாரிடமிருந்து தனக்குத் தேவையான பாடத்தைக் கற்றுக்கொண்டான். உலூதர் பதினுன்கு அகவை நிரம்பியவனுக இருந்தபோது தன்னுடைய சிறிய தந்தையிடமிருந்து சிறுமரக்கிளையுடன் மற்றெரு செடியை ஒட்டுப்போடும் முறையைத் தெரிந்து கொண்டான். உலூதருக்கு அகவை மிக மிக ஆராய்ச்சியும் மிகுந்தது. பெரியவரானபின் அவர் ஊக்கம் பன்மடங்காயிற்று. வேளாளர்களுக்குத் தொல்லை கொடுத்த சிறிய செவ்வந்தி என்ற களைப்பயிரை மதிப்புமிக்க நன்மலர்ச் செடியாக்க அருமுயற்சி செய்து கொண்டிருந்தார். தம்முடைய உடன் பிறப்பாளனின் மடல் மூலம் ஒரே பருவத்தில் மூன்று பருவப் பயிர்களைப் பயிரிட ஏற்ற இடம் கலிபோர்னியாவே என்பதைஅறிந்தார். கலிபோர்னிய வானிலை தமது நிலத்திணை இன ஆராய்ச்சிக்கு ஏற்ற இடமாக இருக்கும் என உறுதிப்படுத்தினுர்; அங்குச் செல்ல விழைந்தார். உலூதர் தாம் செய்த நீராவி ஊது குழலின் அடிப்படையில் ஒரு சிறிய நீராவி எந்திரம் செய்து விற்ருர்; கிடைத்த தொகையைக் கலிபோர்னியாச் செலவிற்காகத் தம் தந்தையிடம் காப்பாக வைத்தார்.

இருபது அகவை நிரம்பியபோது அவருடைய தந்தை இறந்து விட்டார்; குடும்பம் 'குரோடன்' நகருக்குக் குடியேற்றப் பட்டது; தோட்டத்தில் உருளைக்கிழங்கு பயிரிட்டார். உருளைச் செடியில் காய்த்த பச்சைக் காயிலிருந்து பெற்ற விதைகளைக் கொண்டு தமது அரிய முயற்சியாலும், அறிவின் திறமையாலும், வெள்ளை நிறமுடைய வழவழப்பான உயர்ந்த உருளை இனத்தை விளைவித்தார். சில புதிய விதைக் கிழங்குகளை நூற்றைம்பது தாலருக்கு விற்ருர்.

உலூதர் இருபத்தொரு அகவை இளைஞராக இருக்கும்பொழுதே உலகின் மிகச்சிறந்த அறிவியல் அறிஞர்களில் ஒருவரான சார்லசு தார்வின் எழுதிய, "மாந்தர்களின் வளர்ப்பிலே விலங்குகளும் நிலைத்திணைகளும்" என்ற பொத்தகத்தைப் படித்தார். "மற்ற எந்தத் தொழிலையும்விடப் புதிய நிலைத்திணை இனச் செடிகளைக் கண்டு பிடித்து உலகிற்குப் பணியாற்றும் தொழிலில் உறுதியாக வெற்றி காண முடியும்" என முடிவு கொண்டார்.

உலூதர், தமக்குச் சொந்தமாயிருந்த பதினேழு குறுக்கம் (ஏகர்) நிலத்தையும், வேளாண்மைக் கருவிகளையும், விதைகளையும் விற்ருர். 1875-ஆம் ஆண்டில் தம்முடன் பத்து உருளை விதைக் கிழங்குகளுடனும், பல்வகை விதை வகைகளுடனும், கலிபோர்னியப் பயணத்தைத் தொடங்கினுர்; கலிபோர்னியாவில் சாந்தாரோசா என்ற இடத்தை அடைந்தார். பயணச்செலவு போக மிஞ்சிய பணம் கொஞ்சமே இருந்தது. நாள்தோறும் கூலிவேலை செய்தால்தான் வயிற்றுக்கு உணவு என்ற நிலையில் இருந்தார்.

பல இன்னல்களுக்குப்பின் 1876-ஆம் ஆண்டின் இறுதியில் சாந்தாரோசாவிலிருந்து பதின்மூன்றுகல்தொலைவிலுள்ள 'பெடாலுமா' என்ற நகருக்குச் சென்ருர். அங்கு இளஞ்செடித் தோட்டம் (Nursery garden) வைத்திருந்த டபிள்யூ. எச். பெப்பர் என்பவரிடம் வேலையில் சேர்ந்தார். தங்குதற்கு ஏற்ற இட ஏந்தின்மையாலும், கடின உழைப்பாலும் உடல் நலம் கெடவே மீண்டும் சாந்தாரோசாவுக்குத் திரும்பினுர்.

துயர்பல அடைந்தும், உலூதர் சாந்தாரோசாவிலிருந்த தம்முடைய உடன் பிறப்பாளர்களிடம் பொருளுதவி ஏதும் கேட்கவில்லை. தம் உடன்பிறப்பாளன் ஒருவனுடைய தோட்டத்தில் உடன் கொண்டு சென்ற பத்து உருளை விதைக் கிழங்குகளையும் பயிரிட்டார்; கிடைத்த விதைக்கிழங்குகளை வேளாளர்களிடம் விற்ருர்; அத்தொகையைக் கொண்டு சாந்தாரோசாவிற்கு அருகில் ஒரு சிறு நிலப்பகுதியை விலைக்கு வாங்கினுர்; நாள்முழுதும் தச்சுவேலை செய்தார்: ஓய்வு நேரத்தில் செடிகள் வளர்க்கும் வேலையில் ஈடுபட்டார். உலூதர் மாந்த இனத்திற்கு அன்ருடம் பயன்படத்தக்க உணவுப் பொருள்களைக் கொடுக்கும் மரங்களுக்கே தமது தோட்டத்தில் மிகுந்த இடம் ஒதுக்கினுர்.

1877-ஆம் ஆண்டு உலூதர் தமது பழச்செடிகளின் விற்பனையைத் தொடங்கினார். தொடக்கத்தில் 15.20 தாலராக இருந்த ஆண்டு வருவாய் 1880-ஆம் ஆண்டில் 1112.69 தாலராக உயரும் அளவுக்கு முன்னேறியது. கலிபோர்னியாவில் ஒரே பருவத்தில் ஒட்டுப்பழத் தோட்டத்தை வளர்க்க இயலாது என்ற எண்ணம் கொண்டிருந்தனர். தட்டன் என்பவருக்கு 1881-ஆம் ஆண்டு ஒரே ஆண்டில் இருபதினாயிரம் ஒட்டுச்செடிகளைப் பயிரிட்டுத் தந்து அந்த எண்ணத்தை மாற்றினார்; இதனால் உலூதரின் புகழ் பரவியது. புதிய சாந்தாரோசா நகரின் நடுவில் நான்கு குறுக்கம் நிலத்தை வாங்கினார். அதில் பழமரங்களைப் பயிரிட்டார். அதன் வருவாயிலிருந்து அங்கிருந்து ஏழுகல் தொலைவிலுள்ள 'செபாசுடபோல்' என்ற இடத்தில் ஒரு பண்ணையை வாங்கினார்.

உலூதர் கறுப்புநிறப் பேரியை வெள்ளைநிறப் பேரியாக விளைவிக்க முயன்றார். தோல்விகள் பல கண்டும் தமது அயரா உழைப்பினால் முள்நிறைந்த பேரிச்செடியை முள்ளற்ற பேரிச்செடியாக முளைக்கும் வகையில் மாற்றினார். தமது கற்பனை நிறைவடையும் முறையில் வெள்ளைநிறப் பேரியையும் தோற்றுவித்தார்.

சீமை அத்திப் (பிளம்) பழங்களில் காணப்படும் கொட்டைகளை மறையச் செய்து கொட்டையற்ற பழங்களைத்தரும் மரங்களைத் தோற்றுவித்தார். நாற்பதாண்டுக் கடும் உழைப்பின் மூலம் அறுபது வகைச் சதைப்பற்றுள்ள பழவகைகளை உலகுக்களித்தார்.

'நைட்சேட்டு' என்ற களைப்பூண்டு குடும்பத்திலிருந்து ஒட்டுச்சேர்த்து 'சன்பேரி' என்ற தரமிக்க தக்காளி வகையைக் கண்டு தந்தார்; புதர்களில் பழுக்கும் ஆறு பழவகைகளைக் கண்டு பிடித்தார்; மரங்களில் காய்த்துப் பழுக்கும் அறுபத்தாறு பழவகைகளை மக்கள் பெறச்செய்தார். ஆண்டில் மூன்றுமுறை காய்த்துப் பழுக்கும் புளிச்சம்பழ மரவகை ஒன்றைக் கண்டுபிடித்தார்.

முள் நிறைந்த சப்பாத்தி, கள்ளி வகைகளைக் குறுக்கத்திற்கு 150 கல்லெடை (Ton) விளைவைத் தரக்கூடிய முள்ளற்ற சப்பாத்தி வகைகளாக மாற்றி விளைவித்தார். மற்ற எந்தத் தீனியையும்விட அவை ஒரே ஆண்டில் ஏராளமான மாட்டுத் தீனியைத் தந்தன. இரண்டு ஆண்டுகள் மழையின்றிக் காயினும் செழித்து வளரும் தன்மை பெற்றிருந்தன. மாட்டுத் தீனியாகப் பயன்படுத்தும் முப்பத்தைந்து சப்பாத்தி வகைகளைக் கொடுத்துதவினார்.

தமது ஆராய்ச்சியின் பயனாக ஐந்துவகை செவந்தி (சாமந்தி) மலர்ச்செடிகளைக் கண்டுபிடித்தார். எந்த இடத்திலும் ஆண்டு முழுதும் இடையின்றிப் பூத்துக்கொண்டிருக்கும் படுக்கை முளரி (Bed rose) என்ற முளரி இனச்செடியைத் தோற்றுவித்தார். செடி மூன்று அல்லது நான்கு விரற்கடை (அங்குலம்) உயரம் இருக்கும்போதே மலர்கள் மலரத் தொடங்கும். இந்த முளரி இனம்தான் 1904-ஆம் ஆண்டு செயிண்டு உலூயிக்கு அனைத்துலகக் கண்காட்சியில் தங்கப் பதக்கத்தைப் பெற்றுத்தந்தது. பதினொருவகை முளரிச் செடிகளைக் கண்டுபிடித்துத் தந்தார். எழுபத்துமூன்று புதிய மலர் இனங்களைக் கொடுத்தார்.

உலூதரின் கண்டுபிடிப்புகள் மந்திரம் செய்து காட்டுவது போல் எளிதில் நிகழ்ந்தவை யல்ல! அவருக்குக் கிடைத்த புகழ் திடீரென வந்ததுமன்று! ஒருநாள் மாலையில் வெறுப்பான நாற்றத்தினிடையே எங்கோ ஒரு மூலையிலிருந்து ஒரு தும்பை மலர் நன்மணம் பரப்பியது. மணம் பரப்பும் அம்மலரைக் காணவேண்டுமெனின் தமது மூக்கினால் ஒவ்வொரு மலராக மோந்து பார்ப்பதைத் தவிர வேறு வழியில்லை என முடிவுசெய்தார்.

தரையில் மண்டியிட்டுக் கைகளை ஊன்றி ஊர்ந்தார். ஒரு மூலையிலிருந்து ஒவ்வொரு மலராக மோந்துகொண்டே சென்றார். இரண்டாம் மலரோ மூன்றாம் மலரோ வல்ல அது! ஏன்? ஐம்பதாம் மலரிலோ ஐந்நூறாம் மலரிலோ கூட அந்த நன்மணமலர் கிடைத்து விடவில்லை. இருட்டி நெடுநேரமாகியும் மோந்தபடியே ஊர்ந்தார். ஏறக்குறைய நான்காயிரம் மலர்களை மோந்த பின்னர்த்தான் நன்மணம் கமழ்ந்த தும்பை மலரைக் காணமுடிந்தது. அவர் பெற்ற மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. அவர் தம் முழங்கால்களால் தவழ்ந்து தவழ்ந்துதான் புகழேணியின் உச்சியை அடைந்தார் எனக்கூறுதல் பொருத்த முடைத்தன்றோ?

உலூதர் தமது அயரா ஆராய்ச்சியாலும், ஓயா உழைப்பாலும் மாந்த இனம் பயன்படுத்தத் தக்க வகையில் ஏறத்தாழ இருநூற்று இருபது புதியவகை மரங்கள், காய்கறிகள், பழங்கள், மலர்கள் ஆகியவற்றைக் கண்டுபிடித்தார்! மாந்த இனம் போற்றும் வண்ணம் வியத்தகு பணியாற்றிய செடி கொடிச் சித்தர் 1926-ஆம் ஆண்டு மறைந்தார். ஆனால் அவர் விட்டுச்சென்ற நிலைத்திணை இனம் அவருடைய புகழ் பாடுகிறது; மாந்த இனம் நன்றிகூறிக்கொண்டே இருக்கிறது.

அவருடைய வாழ்க்கையில் துய்த்துணர்ந்து அவரால் கூறப்பட்ட சில பேருண்மைகளைக் காணுங்கள்:

"ஒவ்வொரு சிக்கலும் வெற்றிக்கு வழிகோலும் ஒவ்வொரு படி."

"மாந்தன் இயற்கை அன்னைக்கு உதவினால் நாம் விரும்பும் எத்தகைய புதிய உயிரினங்களையும் பெறமுடியும்."

"ஒரு மாந்தனின் வாழ்க்கைக் காலத்தை நீட்டுவதென்பது இயலாதது. ஆனால், தரத்தைச் சிறப்புறச் செய்யலாம், எப்போது? உதவாக்கரைகளை ஒதுக்குவதன்மூலம்!"

"நான் மிகுதியாகக் கற்றுக்கொண்டதெல்லாம் வயல் வெளிகளிலும், எனது சொந்தத் தோட்டத்திலுமே யாகும்! மாந்தனைவிட இயற்கைதான் எனக்கு மிகுந்த உதவி புரிந்தது!"

அன்புத் தமிழ்ச்சிட்டுகளே! அருந்தமிழ்ச் செல்வங்களே! வருங்காலச் செம்மல்களே! உங்களை உருவாக்கிய இயற்கை அன்னைக்கு உதவிசெய்ய வேண்டாவா? இயற்கையைக் கூர்ந்து நோக்குங்கள்! இயற்கையின் ஒவ்வொரு அசைவிலும் கருத்தைச் செலுத்துங்கள்! மறைந்து கிடக்கும் பேருண்மைகளைக் காணுங்கள்! மாந்த இனம் மறக்கவொண்ணா அருந்தொண்டாற்றுங்கள்! O

தமிழ்ச்சிட்டு, கடலூர்-1

(தனித்தமிழ் சிறுவர் கலையிதழ்)

மாற்றப்பட்ட உறுப்பினர் கட்டணங்கள்.

		உள்நாடு.	வெளிநாடு.	கொழும்பு.
ஆண்டுக்கட்டணம்	உருபா	3-00	5-50	4-00
தனியிதழ்	,,	0-25	0-45	0-35

(அரையாண்டுக் கட்டணம் இல்லை)

ஓரிதழுக்கு 50 காசு மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க!

இந்தியப் பல்கலைக் கழகங்களும் தொடங்கிய ஆண்டும்

சென்னை	1857
கல்கத்தா	,,
பம்பாய்	,,
அலகாபாத்து	1886
பூனு	1902
காசி	1915
மைசூர்	1916
பாட்னு	1917
உசுமானியா (ஐதராபாத்து)	1918
இலக்னோ	1920
அலிகார்	,,
விசுவபாரதி	1921
தில்லி	1922
நாகப்பூர்	1923
ஆந்திரா	1926
ஆக்கிரா	1927
சாகர்	1927
அண்ணுமலை	1929
திருவனந்தபுரம் (கேரளா)	1937
உத்கல் (கட்டாக்)	1943
பஞ்சாப்	1947
இராசபுதனம் (செயப்பூர்)	1947
உரூர்க்கி	1948
கருநாடகம்	1948
குசராத்தி	1950
பீகார்	1952
வெங்கடேசுவரர் (திருப்பதி)	1954

தொகுப்பு: 'கதிரொளி' சேரன்மாதேவி,

பட்டம் விடுவோம்

-இளஞ்சித்திரன்.

1. விண்ணை நோக்கி
நூலை ஏற்றிப்
பட்டம் விடுவோம் தம்பீ, வா!
கண்ணைக் கவரும்
வண்ணத் தாளில்
பட்டம் விடுவோம் தம்பீ, வா!

2. ஏற்ற அளவில்
வாலை இணைத்துப்
பட்டம் விடுவோம் தம்பீ, வா!
காற்றைக் கிழித்துக்
கடிதில் ஏறும்
பட்டம் விடுவோம் தம்பீ, வா!

3. முகிலைத் தொட்டு
முத்தமிட் டாடும்
பட்டம் விடுவோம் தம்பீ, வா!
எகிறிக் குட்டிக்
கரணம் போடும்
பட்டம் விடுவோம் தம்பீ, வா!

4. விண்ணில் மிதக்கும்
சதரக் கப்பல்
பட்டம் விடுவோம் தம்பீ, வா!
கண்ணில் கருத்தில்
ஒன்றிய ஆட்டம்
பட்டம் விடுவோம் தம்பீ, வா!

தமிழிலிருந்து ஆங்கிலத்துக்குச் சென்ற சொற்களின் பட்டியல்.

தமிழ்	ஆங்கிலம்
அக்குள்	Axil
அகில்	Agila, agalwood, eagle-wood
அச்சு	Axis
அசக்கு	Shake
அஞ்சல்	Angel
அதோள், அதோளி	(O. E.) thider, thither.
அப்பன்	Abba, Papa, Pope.
அம்மா	Amma, Amah, Mamma Mama.
அரத்தம் (குருதி)	Red, Ruddy.
அரள் (பேரச்சம்)	Horror
அரிசி	Rice
அல்லது	Alias
அவாவு (பேராவல்)	Avid
அளம் (படிக்கார உப்பு)	Alum
ஆகு	Augment
ஆண்டு (அங்கு)	Yond
ஆலி (ஆலங்கட்டி)	Hail
இஞ்சிவேர்	Ginger
இடாசு (இடைக்குறி)	Dash
இதோ	Lo!
இதோள், இதோளி	Hither
இரு	Are
இரும்பு	Iron
இல்	Inn
இளக்கு	Lax
ஈன்	Ean
உம்பர்	Upper, Over.
உரறு	Roar
உருடை (உருள்)	Rota

தமிழ்	ஆங்கிலம்
உருத்திரம் (சினம்)	Wrath, Wroth.
உரும்	Warn
உருள்	Roll, Whirl.
உரை	Oral
உறு	Very
ஊசல்	Oscillate
ஊளை	Howl
எதோள்	Whither
எல்லா, (ஏளா)	Hallo
எல், (லாம்)	All
எவ்வு, (எம்பு)	Heave
ஏர்	Ear (to plough)
ஏர்	(To rise above) air
ஒண்ணு (ஒன்று)	One
கக்கு	Keck
கட்டில்	Kartel, Cot.
காண், (காட்சி)	Con, Can, Ken, Know.
கண்டு	Candy
கப்பல்	Skiff, Ship.
கர	Crypt
கரடு	Coarse
கரி	Char
கருவி (தொகுதி)	Graf, Grove (group of trees)
கரை (கத்து)	Cry
கரை	Crow
கல்	Calculate
கலம்	Galley
கலவம்	Caravel, Carvel
கலவர்	Coret
கள்	Conceal
காளம்	Gullet
களி	Glee

(பாவாணர் நூல்களிலிருந்து எடுத்தவை)

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1,